SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை – ஜனவரி 2024

**(Level I Examination – January 2024)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
# மட்டம் I பரீட்சை – ஜனவரி 2024
# (104) வணிகச் சூழல்
# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (3)

**1.2** (4)

**1.3** (1)

**1.4** (3)

**1.5** (4)

**1.6** (1)

**1.7** (1)

**1.8** (1)

**1.9** (3)

**1.10** (2)

**1.11** பிழை

**1.12** சரி

**1.13** சரி

**1.14** பிழை

**1.15** சரி

**1.16** பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பை அளவிடப் பணம் பயன்படுத்தப்படுகிறது. பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தைப் பரிமாற்றத்திற்கான பெறுமதி பண மதிப்பில் குறிப்பிடப்படுகின்றன. எனவே, பணம் கணக்குகளின் அளவீடாக செயற்படுகிறது.

**1.17** "உச்ச நன்னம்பிக்கை" கோட்பாடு என்பது காப்புறுதி வழங்குனர் மற்றும் காப்புறுத்தப்படுபவர் இருவரும் விடயப்பொருள் தொடர்பான தகவல்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும். காப்புறுதி உறவில் உள்ள இரு தரப்பினரும் காப்புறுதி செய்யப்பட்ட விடயப்பொருள் மற்றும் தொடர்புடைய அம்சங்கள் தொடர்பான தகவல்களை வெளியிட வேண்டும் என்பதே இக்கொள்கையாகும்.

**1.18**

(i) சில சமூகங்களில் விரோத மனப்பான்மை. காணப்படல்
(ii) வசதியளித்தல் நிறுவனங்களில் பெண்களை ஏற்று கொள்ளும் தன்மை குறைவாக உள்ளது.
(iii) போதிய அரச சலுகைகள் இன்மை
(iv) ஆணாதிக்கத்தின் கருத்தாக்கம் சமூகத்தில் வேரூன்றியிருத்தல்
(v) பெண்களின் அதிகப்படியான உள்வீட்டுக் கடமைகள்.
(vi) தொழில்முனைவோர் என்ற வகையில் பெண்களுக்கான குறைவான அங்கீகாரம்
(vii) பெண்கள் மீதான கலாச்சார தடைகள்
(viii) பெண் தொழில்முனைவோருக்கு போதிய ஊக்கமின்மை
(ix) சில நாடுகளில் காணப்படும் விதிமுறை அழுத்தங்கள்

aat SRI LANKA

**1.19**

(i) வணிகத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல்
(ii) வெற்றிகரமாக போட்டியிடும் திறன்
(iii) நிதி அம்சங்களிலான வினைத்திறன்
(iv) தொழிற்துறை உறவுகளைப் பாதுகாத்தல்
(v) தரமான பொருட்கள் சேவைகளை வழங்கி வணிக நிலைத்திருப்பை உறுதிசெய்தல்.
(vi) புலமைச் சொத்துரிமையைப் பாதுகாத்தல்.

1.20

(i) இயலுமைமிக்க மற்றும் தொடர்ச்சியான பங்குச் சந்தைக்கு வசதியளித்தல்

(ii) முதலீட்டாளர்களை பாதுகாத்தல்

(iii) மூலதன உருவாக்கத்திற்கான ஆதரவு வழங்குதல்

(iv) பத்திரங்களை சரியாக மதிப்பீடு செய்தல்

(v) மூலதனத்தின் சரியான வழிமுறைகளை ஏற்படுத்தல்

(vi) மூலதன உருவாக்கத்திற்கான ஆதரவுகள்

(vii) ஊகத்திற்கான வசதிகள்

(viii)பருவகால பத்திரங்கள்

(ix) வணிகத் தகவலைத் தூய்மைப்படுத்துதல்.

*(02 புள்ளி வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)*

*பிரிவு **A** முடிவு*

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01 பகுதி II – வணிக அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள்***
***அத்தியாயம் 01 பகுதி II _ வணிக அமைப்புக்கள்***

**(a)**

| | |
|---|---|
| **உரிமை** | 2 முதல் 20 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. தொழில்சார் பங்குடமைகளுக்கு உச்ச வரம்பு இல்லை. |
| **மூலதனத்திற்கான பங்களிப்பு** | பங்காளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுக்கு மூலதனம் பங்களிப்பு செய்யப்படும் |
| **வரையறுக்கப்படாத பொறுப்பு** | பங்காளருக்கு வரையரையற்ற பொறுப்பு |
| **முகாமை** | முகாமை அனைத்து பங்காளர்களினாலும் அல்லது சில பங்காளர்களினால் மேற்கொள்ளப்படும் |
| **இலாபப் பகிர்வு** | நிர்வாக கட்டுப்பாடு மற்றும் பங்காளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக இலாபம் பகிரப்படும். |
| **கட்டுப்பாடு** | பங்குடமை ஒப்பந்தம் மற்றும் பங்குடமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் கட்டுப்பாடு ஆளுகை செய்யப்படும். |
| **நிலைத்திருப்பு** | தொடர்ந்து செல்லும் தன்மையற்றது |
| **சட்ட ஆளுமை** | சட்ட ஆளுமை அற்றது. மற்றும் சட்டத்தின் முன் பங்குடமை பங்காளர்களின் பெயரில் தோற்றமளிக்க வேண்டும். |
| **பதிவு** | அனைத்து பங்காளர்களின் பெயர்களிலும் பதிவு பராமரிக்கப்பட்டால் பதிவு செய்தல் கட்டாயமில்லை |
| **கணக்கீடு மற்றும் கணக்காய்வு** | கணக்கீடு மற்றும் கணக்காய்வு கட்டாயமில்லை. |
| **கலைப்பு** | கலைப்பு நீதிமன்றத்தால் அல்லது தன்னார்வ கலைப்பு மூலம் கலைக்கப்படும். |
| **வரிக்கொடுப்பனவு** | வருமான வரி வணிகத்தின் பெயரில் செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் பங்காளர்கள் தனித்தனியாக தமது பெயரில் செலுத்துதல் வேண்டும். |

***(04 புள்ளிகள்)***

**(b)**

- பங்காளர்களின் பொறுப்பு வரையறையற்றது.
- சட்ட ஆளுமையற்றது

aat SRI LANKA

- மூலதனத்தை அணுகுவதில் காணப்படும் கட்டுப்பாட்டினால் வணிகத்தை விரிவுபடுத்துவதில் சிக்கல்.
- வணிகத்தின் வெற்றியானது பங்காளர்களின் முகாமை மற்றம் தொழில்முனைவுத் திறனை சார்ந்தது.
- தொடர்ந்து செல்லும் தன்மையற்றது.
- இழப்பானது பங்காளர்களினால். மட்டுமே தாங்கப்படும்
- வணிகத்தில் திறமையான ஊழியர்களை ஈர்ப்பது கடினமானது.
- வணிகம் விரிவடையும் போது முகாமை செய்வது கடினம்.
- ஒவ்வொரு பங்காளர்களும் பங்குடமையின் முகவராகவும் ஏனைய பங்காளர்களது நடவடிக்கைகளுக்கு பொறுப்புடையவர்களுமாவர்
- பங்காளருக்கிடையில் முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் ஏற்படல்.

*(03 புள்ளிகள்)*

**(c)**

- பங்குடமைக்கு பங்களித்தல்
- இரகசிய இலாபங்களை ஈட்டாதிருத்தல்.
- பங்குடமையின் சிறந்த நலனுக்காகச் செயற்படுதல்
- போட்டி வணிக நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.
- நல்லெண்ணத்துடன் செயற்படுதல.
- இழப்புகளுக்கு பங்களிப்பு செய்தல்.
- ஒவ்வொரு பங்காளர்களும் வணிகத்திற்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புடையவர்களாக இருத்தல்.
- பங்காளர்கள் தங்கள் ஆளுமைக்கு அப்பால் செயற்படுவதைக் கட்டுப்படுத்துதல்
- எந்த ஊதியமும் இல்லாமல் பங்குடமையில் வேலை செய்தல்
- பங்குடமையில் தமது பங்கை இன்னொருவருக்கு மாற்றுவதைத் தடுத்தல்
- வணிகச் சொத்தை தனிப்பட்ட சொத்தாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
- வணிக நடவடிக்கைகளில் விடாமுயற்சியுடன் கலந்து கொள்ளல்.
- பங்குடடையின் இலாபம் மற்றும் நட்டத்தில் பங்கு கொள்ளல்.
- மோசடிகளுக்கான இழப்பீடு
- பங்குடமை நடவடிக்கைகளில் சரியான கணக்குகளை பேணுதல்.
- பங்குடமை தொடர்பான அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்துதல்

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| |
|---|
| ***அத்தியாயம் 03 பகுதி IV – வணிகத்தின் துணைச்சேவைகள்: போக்குவரத்து*** |
| ***அத்தியாயம் 04 பகுதி IX – வணிக அமைப்புக்கள்: இலத்திரனியல் வணிகம்*** |

**(a)**

- **வணிகத்தில் சிக்கனத்தை செயற்படுத்துதல்**: ஒழுங்காகத் திட்டமிடப்பட்ட போக்குவரத்து முறைமையானது பொருளாதாரச் சேமிப்பையும் நிறுவனத்தில் விநியோக நன்மைகளையும் மேம்படுத்தும்.
- **வழங்கல் சங்கிலியியின் செயற்திறனை மேம்படுத்துதல்**: ஶ்ரீதேவாவிற்கு தொழிற்சாலைக்கு ஏற்றுமதி விநியோகங்களுக்கு மட்டுமின்றி, மூலப்பொருட்கள் மற்றும் களஞ்சியங்களுக்கு மூலப்பொருட்களை வழங்கவும் போக்குவரத்து தேவைப்படுகிறது. நம்பகமான ஒரு போக்குவரத்து முறைமையானது விநியோகங்களைக் கையாள்வதில் மேம்பட்ட செயற்திறனை ஏற்படுத்தும்.
- **வாடிக்கையாளரின் திருப்தியை அதிகரிக்கும்:** உற்பத்திகள் குறித்த இடத்திற்கு சரியான நேரத்தில் சிறந்த நிலையில் சென்றடைவதனை உறுதி செய்ய போக்குவரத்து உதவுகிறது. இது வாடிக்கையாளருக்கு குறித்த உற்பத்திகள் தொடர்பான திருப்தியை மேம்படுத்துகிறது.
- **மூலப்பொருட்களை சரியான நேரத்தில் பெற்று கொள்ள முடிதல்** - ஒரு நல்ல போக்குவரத்து முறைமையானது உற்பத்திக்கான மூலப்பொருட்களை சரியான நேரத்தில் பெற்று கொள்ள உதவுவோடு வணிகத்தில் இருப்பு அற்ற சூழ்நிலையைத் தவிர்ப்பதனூடாக முடிவுப்பொருட்களை உரிய நேரத்தில் உற்பத்தி செய்ய உதவுகிறது.

*(04 புள்ளிகள்)*

SRI LANKA

**(b)**

- மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை.
- சிறந்த இருப்பு முகாமைத்துவம்.
- போட்டியின் நன்மைகள்
- நாளின் எந்த நேரத்திலும் வணிகம் செயற்பாடுகளை மேற்கொள்ள முடிதல்.
- குறைவான ஆரம்ப செலவு
- குறைந்தளவிலான இடைத்தரகர்களை உள்ளடக்குவதால் விலையினைக் குறைக்க முடிதல்.
- பொருட் தேர்வுக்கான வாய்ப்பை விரிவுபடுத்துகின்றது.
- ஆவணங்களின் பயன்பாட்டைக் குறைத்தல்
- வியாபாரத்தை துரிதப்படுத்துதல்

- மக்களின் பயன்பாட்டிற்கு எளிதானது.
- வாடிக்கையாளர்களின் நேரத்தையும் முயற்சியையும் சேமிக்கும்
- சந்தை விரிவாக்கம்
- புதிய பொருட்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு.
- தொழிற்பாட்டு செயற்திறனை அதிகரிக்கும்.

***(03 புள்ளிகள்)***

**(c)**

- சுமைச்சீட்டு
- மாதிரிப் பட்டியல் (Proforma invoice)
- வர்த்தக விலைப்பட்டியல் (Commercial invoice)
- நாணயக் கடிதம்
- தோற்றுவாய்ச் சான்றிதழ்
- காப்பீட்டு சான்றிதழ்
- சுகாதார சான்றிதழ்

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| |
|---|
| ***அத்தியாயம் 03 பகுதி IV – துணைச்சேவைகள்: காப்புறுதி*** |

**(a)**

- **சட்டப் பொறுப்புகளை உள்ளடக்கும்**: இந்த வகையான காப்பீட்டுக் கொள்கையானது, எதிர்பாராத நிகழ்வுகளில் இருந்து எழும் அனைத்து வகையான சட்டப் பொறுப்புகளையும் ஈடுசெய்ய உதவுகிறது. பணிபுரியும் போது ஊழியர்களுக்கு ஏற்படும் விபத்துக்களின் போது ஊழியரின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவுவதுடன், ஊழியர்களைப் பாதுகாக்கும் நிறுவனத்தின் பொறுப்பையும் தீர்க்கிறது.
- **விபத்துக்களுக்கான காப்பீட்டு உள்ளடக்கம்**: தொழிற்சாலை ஊழியர்களின் காப்பீட்டுத் திட்டம் விபத்துக் காயங்கள், இறப்பு அல்லது ஊனங்களுக்கு எதிராகப் பாதுகாப்பை வழங்குகிறது. காப்புறுதி செய்தவர் இறந்தால் பரிந்துரைக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் இழப்பீட்டைப் பெறலாம். இது நிறுவனங்கள் இழப்பீடு வழங்கும் இடரைக் குறைக்க உதவுகிறது.
- **பணியாளர்களை ஈர்த்தல் மற்றும் தக்கவைத்து கொள்ளல்**: நிறுவனம் தனது ஊழியர்களுக்கான காப்புறுதித் திட்டங்களைக் கொண்டிருந்தால், திறமையான ஊழியர்களை வணிகத்திற்கு ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது.

aat SRI LANKA

- **ஆபத்தைத் தவிர்க்கவும் குறைத்து கொள்ளவும் உதவும்**: ஏதேனும் விபத்து காரணமாக ஊழியர்களுக்கு ஏற்படும் இழப்பீட்டிற்கான செலவுகள் காப்பீட்டு நிறுவனத்திற்கு மாற்றப்படுவதால், நிறுவனத்திற்கு நிதி இழப்பு ஏற்படாது.
- **செயற்திறனை மேம்படுத்துதல்**: பணியாளர்கள் மீதான சில காப்பீட்டுக் கொள்கைகள் குழந்தைகளின் கல்வி, ஓய்வூதியம் போன்ற நிதி இலக்குகளை கொண்ட காப்பீடுகள் நிதி பாதுகாப்பை வழங்குகின்றன. இது ஊக்குவிப்பை அதிகரிப்பதனூடாக ஊழியர்களின் செயற்திறனை அதிகரிக்கவும் உதவுகிறது.

*(04 புள்ளிகள்)*

**(b)** "காப்புறுத்தும் உரிமை" என்பது, காப்பீட்டைப் பெறும் எந்தவொரு தரப்பினருக்கும் காப்பீடு செய்யப்படும் பொருள் (நபர், சொத்து) மீது பூரண உரிமை காணப்படுதல் வேண்டும் என்பதாகும். காப்பீடு செய்யப்படுவதற்கு பின்வரும் அம்சங்கள் காணப்படல் வேண்டும்:

- காப்பீடு செய்யப்படும் நபரின் உயிர் அல்லது உடமையிலிருந்து நன்மை மற்றும் அது இழக்கப்படுவதால் இழப்பையும் கொண்டிருத்தல்.
- நன்மை அல்லது இழப்பினைப் பணப்பெறுமதியில் அளவிடக்கூடியதாயிருத்தல்.
- காப்பீடு செய்தவருக்கும் சொத்துக்கும் இடையிலான உறவை சட்டப்பூர்வமாக நிரூபிக்க முடிதல்.

இந்த நிகழ்வில் XYZ Ltd அதன் தொழிற்சாலை ஊழியர்களுக்கான ஆபத்துக்கு எதிராக காப்பீடு பெறுகிறது. தொழிற்சாலை ஊழியர்கள் XYZ Ltd உடனான வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தின் கீழ் உள்ளதுடன், ஊழியர்களுக்கு ஏற்படும் ஏதேனும் ஆபத்து வணிகத்திற்கு நேரடியான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பது காப்புறுத்தும் உரிமையினை வெளிக்காட்டுகிறது.

aat SRI LANKA

*(03 புள்ளிகள்)*

**(c)**

- எதிர்வுகூறக்கூடியதன்மை
- உயிரிழப்பு
- தொடர்பற்றதன்மை
- உறுதிப்படுத்தத்தக்கதன்மை

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 03 பகுதி I – பணத்தின் தொழிற்பாடுகள்***

**(a)**

- பொது ஏற்புடமை
- வேறுபடுத்தத்தக்கதன்மை
- எடுத்துச் செல்லவும் சேமிக்கவும் எளிதானது
- தனித்துவமானது / எளிதாக அடையாளம் காணக்கூடியது.
- எளிதாக அச்சிடமுடியாமை.
- மதிப்பில் நிலைத்ததன்மை
- நீடித்த தன்மையுடையது.
- பொதுவான தன்மையற்றது அல்லது அருமையானது.
- பொருள் மதிப்பை விட பெயரளவு மதிப்பு அதிகமாக இருக்க வேண்டும்
- அடிக்கடி இரத்து செய்யப்படுவதற்கு உட்பட்டதாக இருத்தலாகாது.

*(04 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b)**

**(i)**

- இலத்திரனியல் பணப்பை
- வரவு அட்டை
- ஸ்மார்ட் அட்டை
- நுண் சுற்றுக்கள் (Macro Chips)
- முற்செலுத்திய அட்டைகள் (Prepaid Cards)

*(02 புள்ளிகள்)*

**(ii)**

- பயன்பாட்டுக் கொடுப்பனவுகள் (மின்சாரம், தொலைபேசி, குத்தகை, போன்றவை.
- வெவ்வேறு வங்கிக் கணக்குகளுக்கிடையே பணப் பரிமாற்றம்.
- கணக்கு நிலுவைகளை விசாரித்தல.
- வங்கிக் கூற்றுக்களை செயற்படுத்தல்
- நிலையான வைப்பு கணக்குகளை ஆரம்பித்தல்
- காசோலை புத்தகத்திற்கான கட்டளை.
- பொது காப்பீடுகளை பெறல்.
- வங்கி கடன்களுக்கு விண்ணப்பித்தல்.

- கூற்றுக்களை நிகழ்நிலையில் சரிபார்த்தல்

*(02 புள்ளிகள்)*

**(c)** காசோலையானது பின்வரும் கூறுகளை உள்ளடக்கியிருக்கும்.

- வங்கிக் கிளையின் அடையாள எண்
- காசோலை தேதி
- வங்கி மற்றும் கிளையின் பெயர்
- தொகை (இலக்கம் மற்றும் சொற்களில்)
- வரைபவரின் கையொப்பம்
- காசோலை இலக்கம்
- பெறுநரின் பெயர் மற்றும் ''பணம்'' என்ற சொல்
- பணம் செலுத்தப்படும் காலம்.

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

***பிரிவு B முடிவு***

(*மொத்தம் 20 புள்ளிகள்*)

**பிரிவு C**

***வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

| |
|---|
| ***அத்தியாயம் 04 வியாபார அமைப்புக்களில் நிறுவனங்கள்*** |
| ***அத்தியாயம் 02 வியாபார சூழல் மற்றும் வணிகத்தில் அதன் செல்வாக்கு*** |
| ***அத்தியாயம் 05 வியாபாரத்தில் அரசின் செல்வாக்கு*** |
| ***அத்தியாயம் 07 முயற்சியாண்மை*** |

**(a)**

- தனியான சட்ட ஆளுமை, கம்பனி தமது சொந்த பெயரில் சட்ட ஒப்பந்தங்களை மேற்கொள்ள உதவுகிறது.
- வணிகத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு எதிராக பங்குதாரர்களது நட்டப்பொறுப்பு அவர்களின் முதலீட்டின் அளவிற்கு வரையறுக்கப்பட்டிருத்தல்.
- சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட மூலகங்களினூடாக நிதியீட்டத்தை மேம்படுத்தும் திறன்.
- கூட்டிணைக்கப்பட்ட வணிகமாகக் காணப்படுவதால், வணிகப் பங்காளர்களுக்கு அதிக நம்பிக்கையை ஏற்படுத்தும்.
- தொடர்ந்து செல்லும் தன்மை கொண்டது.
- பெரிய அளவிலான வணிக செயற்பாடுகளைக் கொண்டிருப்பதால் பொருளாதார அளவு திட்ட சிக்கனங்களை ஏற்படுத்தும்.
- உரிமையிலிருந்து முகாமையானது வேறுபட்டு காணப்படுவதால் திறமையான முகாமையாளர்களை நியமிப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படல். இது முகாமையை மிகவும் திறமையானதாக்குகிறது.
- ஒரே நேரத்தில் பாரியளவு மூலதனத்தை ஈர்க்கும் திறன்.
- வரி நன்மைகள் பெறப்படலாம்.

***(04 புள்ளிகள்)***

**(b)**

- அரசியல் காரணிகள்: வணிகத்திற்கான அரசாங்க ஆதரவு, இறக்குமதி கட்டுப்பாடு
- பொருளாதார காரணிகள்: வாகனங்கள் இறக்குமதி மீதான தடை, நாணயமாற்று விகிதம்
- சமூக கலாச்சாரம்: மோட்டார் கார் பயன்படுத்துபவர்களின் சமூக அங்கீகாரம், மக்களின் வாழ்க்கை முறை
- தொழிநுட்ப காரணிகள்: வாகன மறுவடிவமைப்புக்கு பயன்படுத்தப்படும் நவீன நுட்பங்கள், தொழிநுட்பத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள்.
- சுற்றுச்சூழல் காரணிகள்: வாகனப் பாவனை மற்றும் பொருட்களின் அகற்றலால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்த கவலைகள்.

- சட்ட காரணிகள்: கம்பனி சட்டம், உள்நாட்டு இறைவரி சட்டம், வரிகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவு

***(06 புள்ளிகள்)***

**(c)**

- பணியாளர் ஈடுபாட்டிற்கு
- வணிகத்தின் நற்பெயருக்கு
- திறமையான ஊழியர்களை வணிகத்திற்கு ஈர்த்து தக்கவைத்துக் கொள்ள.
- அதிக முதலீடுகளை ஈர்த்து கொள்ள

***(03 புள்ளிகள்)***

**(d)**

- வரிகளை விதித்தல்
- ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல்
- தகவல்களை வழங்குதல்
- பரிமாற்ற வசதிகளை வழங்குதல்
- நிதி வசதிகளை வழங்குதல்
- பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான குறைந்தபட்ச, அதிகபட்ச கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்தல்
- பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மானியங்களை வழங்குதல்
- உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள்
- பணக் கட்டுப்பாடுகள்

***(04 புள்ளிகள்)***

**(e)**

ஒவ்வொரு வணிக நிறுவனமும் நிச்சயமற்ற நிலைகள் மற்றும் இடர்களை சந்திப்பதனால் அவற்றின் நிலைத்திருப்பிற்கான சவால்களை எதிர் கொள்கிறது. ஆனால் ஒரு சிறந்த முயற்சியாளர் சவால்களை நிறுவனத்தின் மேம்படுத்தலுக்கான மற்றும் புத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதற்கான மற்றொரு வாய்ப்பாகக் கருதலாம். ஏந்தவொரு வணிக நிறுவனத்தினது முதன்மையான நோக்கமானது நீண்டகாலம் சந்தையில் நிலைத்திருத்தல் ஆகும். எனவே நிறுவனங்கள் வணிக சூழலை சரியாக முகாமை செய்தல் வேண்டும். சிரி மோட்டார் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் தற்போதைய சூழலைப் புரிந்துகொண்டு அதன் நிலைத்திருப்பை உறுதிப்படுத்த முதலீடு செய்யக்கூடிய வாய்ப்புகளை மதிப்பீடு செய்துள்ளது. வணிகமானது அதன் வழக்கமான வணிக நோக்கத்திற்கு அப்பால் சிந்தித்து, அத புதிய சிந்தனைகளை செயற்படுத்துவதற்கான அதன் திறன்களை மதிப்பீடு செய்துள்ளது. இந்த மதிப்பீடானது

aat SRI LANKA

நிறுவனத்திற்கு புறச் சூழலினால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மையிலிருந்து வணிகத்தைப் பாதுகாக்கவும் மேலும், மோசமான நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பும் வரை, குறுகிய காலத்தில் கணிசமான வருமானத்தை ஈட்ட மற்றொரு வாய்ப்பை வழங்கியுள்ளது. இது வணிகத்தின் இலாபத்தை அதிகரிக்கவும் அதன் நிலுவைத் கொடுப்பனவுகளை தாமதமின்றி செலுத்தவும் உதவியது.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**பிரிவு C முடிவு**

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*